பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
11 07 2025 6 45
வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் தனியார் தொழில் துறையினர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தங்கர் வலியுறுத்தியுள்ளார்.
- நாட்டில் கடந்த 11 ஆண்டுகளில் மீன் உற்பத்தி 105 சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்சன் சிங் கூறியுள்ளார்.
- உள்நாட்டுப் பாதுகாப்பில் நாட்டிலேயே தமிழக காவல்துறை முன்னணியில் உள்ளதாக முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி மீண்டும் குற்றம் சாட்டியுள்ளார்.
- ஆசிய இளையோர் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் சுராஜ் தங்கப்பதக்கம் வென்றார்.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் தனியார் தொழில் துறையினர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தங்கர் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய தொழில் கூட்டமைப்பின் சார்பில் புதுதில்லியில் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய அவர், உலக அளவில் மந்தநிலை காணப்படும் சூழலிலும், இந்திய பொருளாதாரம் வலுவாக உள்ளதாக கூறினார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, பசுமை ஹைட்ரஜன் உள்ளிட்ட துறைகளில் மேலும் அதிக முதலீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

அரசின் உதவிகளை பயன்படுத்திக்கொண்டு தொழில்துறையினர் நாட்டின் முன்னேற்றத்திற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

எதிர்காலத்திற்கான திறன்களை அதிகரிக்கும் வகையில் கல்வித் துறை, தொழில்துறை, பயிற்சி நிறுவனங்கள் அரசுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்றும் திரு. ஜக்தீப் தங்கர் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

நாட்டில் கடந்த 11 ஆண்டுகளில் மீன் உற்பத்தி 105 சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்சன் சிங் கூறியுள்ளார்.

தேசிய மீன் விவசாயிகள் தினத்தையொட்டி புவனேஸ்வரில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், 11 மாநிலங்களில் செயல்படுத்தப்பட உள்ள 70 மீன்வள திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

உள்நாட்டு மீன்பிடி தொழிலில் உலகிலேயே இரண்டாம் இடத்திற்கு இந்தியா முன்னேறி உள்ளதாக தெரிவித்த அவர், நாட்டில் 3 கோடி பேருக்கு மீன்பிடி தொழில் முக்கிய வாழ்வாதாரமாக உள்ளதாகவும் கூறினார்.

மீனவர்களின் நலனுக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தின் கீழ் செயல்படும் மீன்வள ஆராய்ச்சி மையங்கள், இத்துறையில் நவீன தொழில்நுட்பங்கள் குறித்து தொடர்ந்து ஆய்வுகளை மேற்கொண்டு வருவதாக திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் கூறினார்.

<<<>>>

உள்நாட்டுப் பாதுகாப்பில் நாட்டிலேயே தமிழகம் முன்னணி மாநிலமாக திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், 2023-ஆம் ஆண்டில், திமுக ஆட்சியில் தீவிரவாத எதிர்ப்புப் படை புதிதாக உருவாக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

கடந்த 30 ஆண்டுகளாக பிடிபடாமல் இருந்த, அபுபக்கர் சித்திக் உள்ளிட்ட மூன்று முக்கியத் தீவிரவாதிகளை, அண்மையில் இந்தப் படையினர் கைது செய்துள்ளதாகவும், இதற்காக இப்படையினருக்கு பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கைது நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருந்த கர்நாடக மற்றும் ஆந்திர மாநிலக் காவல்துறையினருக்கும் திரு. மு.க. ஸ்டாலின் நன்றி தெரிவித்துள்ளார்.

<<<>>>

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி மீண்டும் குற்றம் சாட்டியுள்ளார்.

விழுப்புரத்தில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய அவர், திமுக ஆட்சியில் மாநிலம் முழுவதும் போதைப்பொருள் புழக்கம் அதிகரித்துள்ளதாக தெரிவித்தார்.

போதைப்பொருட்களைக் கட்டுப்படுத்த மாநில அரசு முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்றும் அவர் கூறினார்.

கொலை உள்ளிட்ட குற்றச் சம்பவங்களும் அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

முந்தைய அஇஅதிமுக ஆட்சியல் செயல்படுத்தப்பட்ட பல்வேறு நலத்திட்டங்களை இந்த அரசு நிறுத்தியுள்ளதாக கூறிய திரு. எடப்பாடி பழனிசாமி, புதிய திட்டங்களை திமுக அரசு செயல்படுத்தவில்லை என்று கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் காவல்துறையினர் தொடர்ந்து அத்துமீறி செயல்படுவதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், தனியார் பால் நிறுவனத்தில் பணம் கையாடல் புகாரில் சென்னை கொளத்தூர் காவல் துணை ஆணையரால் விசாரிக்கப்பட்ட ஒருவர் தற்கொலை செய்துகொண்டதாக வெளியான செய்தி அதிர்ச்சி அளிப்பதாக கூறியுள்ளார்.

சட்டம் ஒழுங்கைத் தன் நேரடிக் கட்டுப்பாட்டில் வைத்துள்ளதாகக் கூறும் முதலமைச்சர், தமது சொந்தத் தொகுதியில் நடந்துள்ள இச்சம்பவம் குறித்து பதிலளிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எவ்வித சமரமமும் இன்றி முறையான விசாரணை நடைபெறுவதை அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு விழாவையொட்டி முதற்கால யாகசாலை பூஜை நேற்று மாலை தொடங்கியது.

திருக்குட நன்நீராட்டு விழாவுக்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

செங்கடல் பகுதியில் லைபீரிய கப்பல் மீது ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலில் 3 பேர் உயிரிழந்தனர். 10-க்கும் மேற்பட்டோரைக் காணவில்லை.

<<<<>>>>

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, கேரள மாநிலத்தில் இன்றும் நாளையும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

<<<<>>>>

மேகாலயாவின் ஷில்லாங்கில் வடகிழக்குப் பகுதி மேம்பாடு தொடர்பான மாநாட்டை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று தொடங்கி வைக்கிறார்.

<<<<>>>>

விமான சரக்குப் போக்குவரத்துக் கூட்டமைப்பின் 4-வது ஆண்டு மாநாடு இன்று புதுதில்லியில் தொடங்குகிறது.

<<<<>>>>

கால்நடைகளுக்கு தடுப்பூசி செலுத்துதல் மற்றும் மரபணு மேம்பாடு தொடர்பான காணொலி கருத்தரங்கில் மத்திய கால்நடைப் பராமரிப்புத் துறை இணையமைச்சர் திரு. எஸ்.பி. சிங் பாகேல் இன்று பங்கேற்கிறார்.

<<<<>>>>

ஆசியான் அமைச்சர்கள் நிலையிலான கூட்டத்தில் பங்கேற்க மலேசியா சென்றுள்ள வெளியுறவு இணையமைச்சர் திரு. பபித்ரா மார்கெரிட்டா, அங்கு வியட்நாம், இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகளின் அமைச்சர்களை சந்தித்துப் பேசினார்.

<<<<>>>>

சென்னை குரோம்பேட்டையில் அண்ணா பல்கலைக்கழக ட்ரோன் ஆராய்ச்சி மையத்தின் செயல்பாடுகளை தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி நேற்று பார்வையிட்டார்.

<<<<>>>>

சென்னை ஐஐடி-யில் இன்று நடைபெறும் 62-வது பட்டமளிப்பு விழாவில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் சிறப்பு விருந்தினராக பங்கேற்கிறார்.

<<<<>>>>

திருவள்ளுர் மாவட்டம் திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சியர் திரு. பிரதாப் ஆய்வு மேற்கொண்டார்.

<<<<>>>>

புதுக்கோட்டை மாவட்டத்தில் பொது விநியோகத் திட்ட குறைதீர் முகாம் வட்டாட்சியர் அலுவலகங்களில் நாளை நடைபெறும் என மாவட்ட ஆட்சியர் திருமதி அருணா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

டிஎன்பிஎஸ்சி குரூப்-4 தேர்வுகளுக்கான முன்னேற்பாடுகள் குறித்து திருப்பத்தூரில் மாவட்ட ஆட்சியர் திருமதி சிவசௌந்தரவல்லி தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

<<<<>>>>

நாகை மாவட்டம் தெற்கு பால்பண்ணைச்சேரி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்புத் துறையினர் நடத்திய சோதனையில் கணக்கில் வராத ஒரு லட்சத்து 59 ஆயிரம் ரூபாய் பணம் பறிமுதல் செய்யப்பட்டது.

<<<<>>>>

வட சென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னை திருவிக நகர் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப் பணிகளை மாநில அமைச்சர் திரு. சேகர்பாபு ஆய்வு செய்தார்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய இளையோர் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் சுராஜ் தங்கப்பதக்கம் வென்றார்.

பிஷ்கேக்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 20 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆடவர் 60 கிலோ எடைபிரிவில் சுராஜ், கிர்கிஸ்தானின் **Erbol**-ஐ வென்றார்.

82 கிலோ எடைப் பிரிவில் பிரின்சும், 97 கிலோ எடைப்பிரிவில் நமனும் வெண்கலப் பதக்கங்களை வென்றனர்.

<<<<>>>>

சென்னையில் நடைபெற்று வரும் முருகப்பா கோப்பை ஹாக்கிப் போட்டியில் தமிழகம் - மகராஷ்டிரா அணிகளுக்கு இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

மற்றொரு ஆட்டத்தில் கர்நாடக அணி, மத்திய நேரடி வரிகள் வாரிய அணியை வென்றது.

<<<<>>>>

உலகக் கோப்பை மகளிர் செஸ் போட்டியில் இந்தியாவின் கொனேரு ஹம்பி, ஹரிகா துரோனவள்ளி, வைஷாலி மற்றும் திவ்யா இரண்டாவது சுற்றில் வெற்றி பெற்றனர்.

<<<<>>>>

இத்தாலியில் நடைபெற்று வரும் சர்வதேச சாலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சுமித் நாகல் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 6-2, 6-4 என்ற செட் கணக்கில் இத்தாலியின் **Cecchinato**-ஐ வென்றார்.

<<<<>>>>

இந்தோனேஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Durga - Ishita Negi** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

19 வயதுக்குபட்பட்டோருக்கான மகளிர் இரட்டையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 21-14, 21-19 என்ற செட் கணக்கில் இந்தோனேஷியாவின் **Chelsea – Nafina** இணையை வென்றது.

<<<<>>>>